1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இரண்டு சங்கத்திற்கும் மோதல் ஏற்பட்ட நேரத்தில் போலீசார் வரவழைக்கப்பட்டார்கள். தேவை இருக்குமானல், சொல்வதாக அதிகாரிகள் சொன்னர்கள். அதற்கிடையில் அந்தச் சம்பவம் நடந்து முடிந்துவிட்ட காரணத்தால், முழு விவரமும் தெரிய வேண்டுமென்று போலீசில் புகார் செய்யப்பட்டு, வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த இரண்டு சங்கங்களுக்கும் என்ன காரணத்தால் மோதல் ஏற்பட்டதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. தீர்ப்புக்குப் பிறகுதான் என்ன காரணத்தால் மோதல் ஏற்பட்டதென்பது தெரியும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, வழக்கு நீதி மன்றத்தில் இருப்பதால் விவரங்களைச் சொல்ல இயலாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒரு சமாசாரம் நீதி மன்றத்தில் இருக்கும்போது, அதனுடைய விவரங்களைக் கேட்கக்கூடாது.

Government Forests.

*330 Q—THIRU M. SANKARLINGAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that trunks of trees in Government forests were stolen in Kanyakumari District;

(*b*) if so, the value of the same;

(*c*) the year in which the theft took place;

(*d*) whether any complaint was received by Government in this regard; and

(*e*) if so, the action taken thereon?

அரசுக் காடுகள்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், அரசுக் காடுகளிலுள்ள தடிகள் களவு போனது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(உ) எந்த வருடம் நடந்தது ?

(எ) இது பற்றி அரசுக்குப் புகார் ஏதும் வந்ததுண்டா ?

(ஐ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) முதல் (ஐ) வரை. மாண்புமிகு தலைவரவர்களே, 1971-73-ம் ஆண்டுகளில் சுமார் 53,000 ரூபாய் மதிப்புள்ள மரத் தடிகள் களவு போயின. இது சம்பந்தமாக இரண்டு வனச் சரகர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். போலீஸ் புலனாய்வுத் துறையிலே இது சம்பந்தமாக விசாரணை நடைபெற்று வருகிறது.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill, 1974.

(2) பேரவையிலிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 20 of 1974) as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have further received messages from the Hon. Speaker, Legislative Assembly transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the concurrence of the Council :

1. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 15 of 1974).

2. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974 (L.A. Bill No. 21 of 1974).